**தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் - 2020**

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந் திகதிய 2217 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. வீதித் துறை நிறுவனங்களை மேம்படுத்துதல் மற்றும் பைலட் செயற்றிறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தங்களை விருத்தியாக்குதல் என்பவற்றினூடாக தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் வீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,655 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 208 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,275 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் புரிந்துணர்வு ஒப்பந்தமானது 2008 பெப்ரவரி 15 இல் கையொப்பமிடப்பட்டதுடன் கடன் ஒப்பந்தமானது உண்மையான கடன் தொகைக்குள் செயற்றிட்டத்தின் விசாலத்தை மாற்றுவதற்காக 2008 மே 27 இல் திருத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட கடனிற்கு மேலதிகமாக, 2010 ஒக்டோபர் 04 இல் பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் (OPEC) நிதியத்துடன் இலங்கை அரசாங்கத்தால் 1355 பி இலக்க மற்றுமொரு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் ரூபா 880 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் ஒதுக்குவதற்கு இணங்கப்பட்டது. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் 2006 ஏப்ரல் 07 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. இருப்பினும், நெடுஞ்சாலை செயலக கட்டிடத்தின் பூர்த்தியாக்களில் கானப்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. பொருளாதார அபிவிருத்திக்கான ஒபெக் (OPEC) நிதியத்தின் நிதி நடவடிக்கைகள் 2015 ஜுலை 30 இல் மூடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 வரை கூட அதன் நடவடிக்கைகளை தொடர்கின்றது.

**1.3 அபிப்பிராயம்**

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்த 09 தேசிய வீதிகளின் 279 கி.மீகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 தேசிய வீதிகளின் 255 கி.மீகளின் மேம்படுத்தல் மற்றும் புனரமைத்தல் வேலைகள் செயற்திட்டத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு அமுல்படுத்தல் முகவரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நெடுஞ்சாலை செயலக கட்டிடத்தின் நிர்மான வேலைகள் 2016 இல் செயற்திட்டத்தினால் ரூபா 2,938 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், கட்டிடத்திற்கான இணக்கப்பாட்டு பத்திரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கப்பாட்டு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான செயன்முறை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் செயன்முறையில் உள்ளது. | நெடுஞ்சாலை செயலக கட்டிடத்திற்கான இணக்கப்பாட்டு பத்திரத்தினை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 காணி சுவிகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம், 4431 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4431 காணித்துண்டுகளிற்காக ரூபா 2,267 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட 1986 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்கள் சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் எவ்வித காணி துண்டுகளின் கொள்வனவு செயன்முறையையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | பிரிவு 44 இனை வழங்கும் செயன்முறையை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். | சொத்துக்களின் உரிமையினை வீதி அபிவிரத்தி அதிகார சபைக்கு மாற்றம் செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். |